DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.24**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருஞானசம்பந்தன் | Calling | **காவல் ஆய்வாளர்** |
| Father's Name | : | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 05-03-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.02.2019 ஆம் தேதி மூலனூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது காவலர் முத்துப்பாண்டி என்பவர் மூலம் இறந்து போன ராமு என்பவரது தொடை எலும்பை தடயவியல் பரிசோதனைக்காக சென்னை தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். 01.04.2019 ஆம் தேதி மேற்படி அறிக்கை விரைவில் வேண்டும் என்பதற்காக முன்னுரிமை கடிதம் ஒன்றை கொடுத்தேன். **தடயவியல் ஆய்வாக அறிக்கை அ.சா.ஆ.31.** 17.06.2019 ஆம் தேதி இறந்து போன அவருடைய இறந்து போன ராமுவுடைய மனைவி கவிதா மற்றும் அவரது மகன் ஷங்கர் என்பவரது ரத்த மாதிரிகளை சேகரிப்பதற்காக எப்டிஏ கார்டுகளை நீதித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னிட்டு அவர்களது ரத்தமாதிரிகளை சேகரிப்பதற்காக மேற்படி கவிதா மற்றும் அவரது மகன் ஷங்கர் என்பவர்களை தாராபுரம் அரசு மருத்துவமனையில் முன்னிலைப்படுத்துவதற்காக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்றேன். **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.32**.

2. கடந்த 26.09.2019 ஆம் தேதி இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட காரின் உரிமையாளரான பழனிசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி உபயோகித்து வந்த வோடபோன் மற்றும் ஏர்டெல் நிறுவனங்களின் அழைப்பு பட்டியல்களை நோடல் ஆபீசரிடம் இருந்து பெற்றேன். அவரிடமிருந்து மேற்படி அழைப்பு பட்டியலை பெற்ற எங்கள் காவலர் பாலுசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.09.2019 ஆம் தேதி இறந்து போனவர் ராமு என்பது உடலை அரசு மருத்துவமனை கோயம்புத்தூரில் பெற்று சவகிடங்கில் வைத்த மருத்துவர் புவனா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு இந்த வழக்கின் சட்டப்பிரிவை குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 174–ல் இருந்து 302 இதசவாக சட்ட மாறுதல் செய்த அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இறந்துபோன ராமு என்பவரது உடலை கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கடங்கில் ஒப்படைத்த காவலர் முத்துப்பாண்டி என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். மேலும் தடைய அறிவியல் ஆய்வாளர் யுவராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு.ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு அரசுதரப்பு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று 30.09.2019 ஆம் தேதி இறுதி அறிக்கை சமர்ப்பித்தேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தாராபுரத்தில் கவிதா மற்றும் சங்கர் ஆகியோரின் ரத்த மாதிரி பெறுவதற்காக உத்தரவு கோரி தாக்கல் செய்த **விண்ணப்பம் அ.சா.ஆ.33.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகளிடையே எந்தவிதமான தவறான தொடர்பு இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 38 BD 5402 என்ற மான்ஸா கார் அது ஓடும் நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்ய மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை

என்று சொன்னால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவு சான்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆனால் அவரை சாட்சி பட்டியலில் நான் சேர்க்கவில்லை. அவ்வாறு அவரை நான் விசாரிக்காததால்தான் சாட்சி பட்டியலில் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏர்டெல் மற்றும் வோடபோன் நிறுவனத்தின் நோடல் அலுவலர்களிடம் அழைப்புப்பட்டியல்களை பெறும் போது அவர்கள் இந்திய சாட்சி சட்டம் 65 பி கீழான சான்றை வழங்கியதாக என்னுடைய விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி அவலுர்களிடம் அழைப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள செல்போன் டவர்களின் கவரேஜ் சுற்றளவு குறிப்பிட்டு கோரி பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. சம்பவ இடத்திலிருந்து இறந்து போனவரின் பிரேதத்தை காவலர் முத்துப்பாண்டி எந்த வாகனத்தில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார் என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் அவர் எந்த வாகனத்தில் எடுத்துச் சென்றார் என்று என்னிடம் சொல்லவில்லை. சாட்சி பாலுசாமி என்பவரை எனக்கு முன்பு இந்த வழக்கு விசாரணை செய்த ஆய்வாளர் வனிதாமணி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக வழக்கு கோப்பில் காணப்படவில்லை என்று சொன்னால் அது குறித்து நான் அவரிடம் கேட்கவில்லை. மேற்படி ஆய்வாளர் வனிதாமணி சாட்சி பாலுசாமி விசாரித்ததாக வாக்குமூலம் எதுவும் வழக்கு கோப்பில் காணப்படவில்லை. இறந்து போன ராமு என்பவருடைய செல்போன் அல்லது அவரது அழைப்பு பட்டியலை சாட்சியமாக இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி காவலர் பாலுசாமி 65 பி சான்று வழங்குவதற்கு தகுதியான நபர் என்று அவர் உயர் அதிகாரியிடம் சான்று எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளுடைய செல்போன் கைப்பற்றப்பட்டு சான்று பொருளாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. நான் முதல் விசாரணையில் சொன்னது போல சாட்சிகள் யாரையும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களை தயார் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டவாறு எந்தவிதமான குற்றச் செயல்களிலும் எதிரிகள் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் இந்த வழக்கில் சரிவரக் புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.05 19:49:12 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.